***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//525 /2024 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | முருகேசன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.06.2025

முதல் விசாரணை

நான் தற்போது ராஜாங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னுடைய சித்தப்பா. அசா.1 இசக்கியம்மாள் என்னுடைய மனைவி சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் என் மனைவிக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து விட்டோம். என் மனைவி கால் தடுக்கி கீழே விழுந்ததில் அவருக்கு காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019 ம் தேதியன்று இரவு 08.00 மணிக்கு அசா.1 எங்களுடைய வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி பட்டியல் சாட்சி 2 வேலம்மாளை பார்த்து அசிங்கமாக பேசினார் பின்னர் பட்டியல் சாட்சி 2 வேலம்மாளை அடிக்க கையில் மண்வெட்டி

கணையோடு ஓடி வந்தார். அதை அசா.1 தடுத்த போது ஆஜர் எதிரி அசா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசி அசா.1ன் கையை பிடித்து கீழே தள்ளியும் அசா.1ன் இடது கை தோள்பட்டையில் காயம் ஏற்படுத்தினார் என்றும் பின் மண்வெட்டியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றார் என்றும் அசா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி மருத்துவமனைக்கு கூட்டி சென்றேன் என்றும் சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//525 /2024 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | **இசக்கியம்மாள்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 12.06.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜாங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என்னுடைய மாமா. எனது கணவரின் சித்தப்பா. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது கால் தடுக்கி கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக பேசி அவமான படுத்தவில்லை. என்னை அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. நான் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டது.</u>

போலிசார் விசாரணையின் போது கடந்த 09.11.2019ம் தேதியன்று இரவு 08.00 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி பட்டியல் சாட்சி 2 வேலம்மாளை பார்த்து அசிங்கமாக பேசினார் பின்னர் பட்டியல் சாட்சி 2 வேலம்மாளை அடிக்க கையில் மண்வெட்டி கணையோடு ஓடி வந்தார். அதை நான் தடுத்த போது ஆஜர் எதிரி என்னை பார்த்து அசிங்கமாக பேசி எனது கையை பிடித்து கீழே தள்ளியும் எனது இடது கை தோள்பட்டையில் காயம் ஏற்படுத்தினார் என்றும் பின் மண்வெட்டியை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றார் என்றும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுவிட்டு பின்னர் ஆழ்வார்குறிச்சி காவல் நிலையம் சென்று எதிரி மீது நடவடிக்கை எடுக்க ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றும் பின்பு காவல் நிலையத்தில் மருத்துவ நமுனா பெற்று சிகிச்சைக்காக அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் இவ்வழக்கிலிருந்து விடுவிக்க பொய்யாக சாட்சியாக அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi